பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி11 வெள்ளிக்கிழமை 27.09.2024 கதிர் 324



## இலங்கை – சீனா உறவுகளை மேலும் பலப்படுத்தவேண்டும்

### அமைச்சர் விஜித்த ஹேரத் தெரிவிப்பு

இலங்கை - சீனா இடையிலான உறவை மேலும் பலப்படுத்தவேண்டும் என்று அயலுறவுத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத் தெரிவித்தார்.

மக்கள் சீனா உருவாக்கத்தின் 75ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு புதன்கிழமை (25) மாலை கொழும்பு சங்கிரில்லா ஹோட்டலில் ☞ 8

## போதியளவு எரிபொருள் கையிருப்பில் உண்டு

### அதிகாரிகள் ஜனாதிபதியிடம் தெரிவிப்பு

நாட்டில் நுகர்வுக்கு போதுமான எரிபொருள் கையிருப்பு உள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் அதிகாரிகள்இஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு தெரிவித்தனர்.

மக்களுக்குத் தடையின்றிஎரிபொருளைவழங்குவதற்கான அனைத்து நடவடிக்கை ☞ 2

## ரணில் ஆதரவுத் தரப்பினரும் ஒரே அணியாகவே போட்டி

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்த அணியினர் பொதுத் தேர்தலிலும் ஒரே அணியாகஇணைந்துபோட்டியிடத்தீர்மானித்திருக்கிறார்கள். இ-து தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்று வெளியாகும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகளுக்கும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் இது தொடர்பில் நேற்று ஒரு கலந்துரையாடல் இடம்பெற்றது.

நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடும் விதம் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களில் சணம் பித்தம் சணம் வாதம் என்பது மாவை சேனாதிராசவுக்கு மட்டுமல்ல என்பது நேற்றும் தெளிவானது. எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியாகத்தான் எதிர்கொள்வது என்றுபுதன்கிழமையாழ்ப்பாணத்தில் கூடி ஒரு முடிவெடுத்தார்கள் அதில் இடம்பெற்றுள்ள ரெலோ, புளொட், ஈபிஆர்எல்எவ், தமிழ் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியவற்றின்தலைவர்செயலாளர்கள் உள்ளிட்ட தலைமைக் குழுவினர். தமது அந்த முடிவு தொடர்பாக மறுநாள் வியாழக்கிழமைதமிழ்மக்கள்பொதுச் சபையினருடன் கலந்துரையாடுவது என்றும் தீர்மானித்தனர்.

ஆனால், பொதுச்சபையினருடன் நேற்று நடந்த சந்திப்பில் சங்குச் சின்னத்தில் மீண்டும் இணைந்து தேர்தலை எதிர்கொள்வது ☞ 2

## நவம்பர் மாதம் 14 அன்று ஞானசாரருக்கும் தீர்ப்பு

முஸ்லிம்களுக்கு எதிராக இனவாதக் கருத்துக்களைத் தெரிவித்து இன நல்லிணக்கத்திற்கு பங்கம் விளைவித்த குற்றச்சாட்டில் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் நவம்பர் 14 தீர்ப்பு அறிவிக்கப்படும் என கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பசன் அமரசூரிய நேற்று அறிவித்தார். அன்றையதினமே பொதுத்தேர்தல் ☞ 2

## நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வதில்

# இணக்கம் இன்றி முடிந்தது பொதுக்கட்டமைப்பு கூட்டம்

### முடிவெடுக்க இரு நாள் அவகாசம் கேட்டது பொதுச் சபை

**நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினருக்கும் தமிழ் மக்கள் பொதுச் சபையினருக்கும் தமிழ் மக்கள் கூட்டணி மற்றும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தினருக்கும் இடையில் நேற்று யாழ்ப்பாணம் ரில்கோ சொகுசு விடுதியில் இடம்பெற்ற பேச்சு இணக்கமின்றி முடிவடைந்தது.**

**இந்தப்பேச்சுக்களின்போது தமிழ்த்தேசியப் பொதுக் கட்டமைப்பாக நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு அனைத்துத் தரப்பினரும் இணங்கியிருந்த போதும், யாழ்ப்பாணம்மற்றும்வன்னிமாவட்டங்களில் ஆசன ஒதுக்கீடு தொடர்பில் இணக்கம்** ☞ 2

## பாடசாலை நிகழ்வுகளில் இனி அரசியலாளர்கள் வேண்டாம்

### கல்வி அமைச்சர் அறிவுறுத்தல்

அரசியல்வாதிகளை பாடசாலை நிகழ்வுகளுக்கு அழைப்பதை உடனடியாக நிறுத்துமாறு அனைத்து பாடசாலைகளையும் கல்வி அமைச்சரும் பிரதமருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய நேற்று அறிவுறுத்தினார்.

கல்வி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர், அரசியல்வாதிகளை பாடசாலைகளுக்கு அழைப்பதன் மூலம் ☞ 2

## ஜனாதிபதி செயலகத்தின் 29 வாகனங்கள் மாயம்

### விசாரணைக்கு உத்தரவு

ஜனாதிபதிசெயலகத்திற்குச்சொந்தமான 833 வாகனங்களில் 29 வாகனங்கள் காணாமற்போயுள்ளமை குறித்து விசாரணை நடத்தும்படி குற்றப்புலனாய்வுத்திணைக்களத்திற்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஆட்சிக் காலத்தில் அதிகாரிகளாலும் இலங்கையின் உயர்தலைவர்களது நண்பர்களாலும் பயன்படுத்தப்பட்ட நிலையில், தற்போது காலி முகத்திடலில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சொகுசு வாகனங்களைஅத்தியாவசிய சேவைகளுக்காக மட்டும் பயன்படுத்துமாறுமாற்றுமாறு ஜனாதிபதி திஸாநாயக்க மேலும் பணித்துள்ளார்.

காலி முகத்திடலில் நேற்று செய்தியாளர்களிடம் ☞ 8

## தமிழ் அரசு கட்சியும், முன்னணியும் பொதுக்கட்டமைப்புக்குள் வரவேண்டும்

### அரிய நேத்திரனின் கோரிக்கை இது

தமிழ் அரசுக் கட்சி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளும் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பில்வந்துஇணையவேண்டும் என்றுஅழைப்புவிடுத்துள்ளார்ஜனாதிபதி வேட்பாளர் அரியநேத்திரன்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ரில்கோ விடுதியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் தேசிய பொதுக்கட்டமைப்பு சார்பில் களமிறக்கப்பட்ட எனக்கு வடக்கு கிழக்கு மற்றும் தென் பகுதிகளில் வாழக்கூடிய மக்கள் வாக்களித்திருந்தார்கள். இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றிருந்தேன்.

வடக்குமாகாணத்தைச் சேர்ந்தவர்கள் ☞ 2

## ஈ– பாஸ்போர்ட் கொள்வனவுக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை

7 லட்சத்து 50 ஆயிரம் மின்னியல் கடவுச் சீட்டுக்களை (ஈ பாஸ்போர்ட்) இரு நிறுவனங்களிடம் இருந்து கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை எடுத்த தீர்மானத்திற்கு உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

ஐந்து மில்லியன் மின்னியல் (ஈ) பாஸ்போர்ட்களை வழங்குவதற்கான ஆரம்பக் கொள்வனவின் ஒரு பகுதியாக இரண்டு நிறுவனங்களிடமிருந்து 750,000 என் (ஹி-) சீரிஸ் கடவுச்சீட்டுகளை கொள்வனவு செய்வதற்கு அனுமதி அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. இதற்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கில் அமைச்சரவையின் தீர்மானத்தை ☞ 8

## உர மானியம் ஹெட்டேயருக்கு ரூ. 10 ஆயிரம் உடன் அதிகரிப்பு

### ஜனாதிபதி பணிப்புரை

விசாயிகளுக்கு வழங்கப்படும் உர மானியத்தை உடனடியாக 10 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்க ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க உத்தரவிட்டுள்ளார். 15 ஆயிரம் ரூபாயாக இருந்த மானியத்தை 25 ஆயிரம் ரூபாயாக வழங்கும்படி அவர் உத்தரவிட்டுள்ளார்.

2024/2025 ஆம் ஆண்டு பெரும்போக காலத்தில் இந்த மானிய அதிகரிப்பை வழங்கும்படி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க திறைசேரிக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

அதன்படி, இதுவரை ஹெக்டேயருக்கு வழங்கப்பட்ட 15,000 ரூபா உரமானியம் தற்போது 25,000 ரூபாவாக அதிகரிக்கப்படும். இந்த மானியக்கொடுப்பனவு எதிர்வரும்ஒக்டோபர்மாதம்முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வருகிறது. இந்த மானியம் ☞ 8

## ஐக்கிய மக்கள் கூட்டணி பிளவின்றி பொதுத் தேர்தலை எதிர்கொள்ளும்

### முன்னாள் எம்.பி. தயாசிறி தெரிவிப்பு

ஐக்கிய மக்கள் கூட்டணியிலேயே பொதுத் தேர்தலிலும் போட்டியிடுவோம். ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவுக்கு வாக்களித்த அனைவரும் எவ்வித பிளவுகளும் இன்றி ஒன்றிணைந்து பொதுத் தேர்தலையும் எதிர்கொள்வோம் என்றுசுதந்திரக்கட்சியைச் ☞ 2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

என்ற தீர்மானத்திற்கு அவர்கள் அனைவரும் ஒத்துக்போனார்கள். பின்னர் எதற்கு புதன்கிழமை கூடிப் பேசி ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில்தான் போட்டியிடுவது என்று தீர்மானித்தார்கள் என்பதே புரியவில்லை. சணம் பித்தம் சணம் வாதம் என்று திரிகிறார்கள். அரசியல் கொள்கைகளில்தான் அவர்கள் இரட்டைவேடம் போடுகிறார்கள் என்றால் பல மணி நேரங்களைச் செலவழித்து தாங்களே எடுத்த முடிவில்கூட அவர்களால் 24 மணிநேரம்கூடத் தொடரமுடியவில்லை. என்ன ஒரு பரிதாபம்!

நேற்றைய கூட்டத்தில், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கீழ் குத்துவிளக்குச் சின்னத்தில் போட்டியிடுவது என்றால் அதில் தாங்கள் பங்கேற்கப் போவதில்லை என்று விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியும் ஐங்கரநேசன் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் திட்டவட்டமாகத் தொடக்கத்திலேயே தெரிவித்துவிட்டன. விக்னேஸ்வரன் கூட்டத்திற்கு வரவில்லை என்றாலும் கட்சியின் பொருளாளரையும் மாநகர சபை முன்னாள் உறுப்பினரும் மணிவண்ணன் அணியைச் சேர்ந்தவருமான பார்த்தீபனையும் இந்தக் கருத்தை உறுதியாகத் தெரிவிக்கும்படி கூறி அனுப்பி வைத்திருந்தார்.

அதுபோக, சங்குச் சின்னம் ஏற்கனவே மக்கள் மத்தியில் அறிமுகமாகிவிட்டதனால் குத்துவிளக்கைவிட சங்கில் கேட்பதே சாதகமானது என்று பொதுச் சபையினரும் வலியுறுத்த கடைசியில் ஜனநாயகக் கூட்டணியினர் அதை ஏற்கவேண்டியதாகிப் போய்விட்டது. இறுதியில் நாடாளுமன்றத் தேர்தலை சங்கில் கேட்பது என்று முடிவுக்கு அனைவரும் இணங்கினர். ஜனநாயகக் கூட்டணியின் குத்துவிளக்குச் சின்னத்தை மாற்றி சங்கைச் சின்னமாகக் கேட்பது என்கிற யோசனை கட்சிகளால் முன்வைக்கப்பட்டது. ஆனால், ஜனநாயகக் கூட்டணியின் கீழ் கேட்பதில் விக்னேஸ்வரன் தரப்பும் ஐங்கரநேசன் தரப்பும் சாதகமான பதிலைக் கொண்டிருக்கவில்லை.

இதற்கிடையில் நாடாளுமன்றத் தேர்தலில் பல தடவைகள் போட்டியிட்டும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் இருக்கும் முதியவர்கள் போட்டியிலிருந்து விலகிக்கொண்டு இளைஞர்களுக்கு வழிவிடவேண்டும் என்று பொதுச் சபையினர் தரப்பிலுள்ள ஒரு பகுதியினர் கூட்டத்தில் வலியுறுத்தினர். இது கூட்டத்தில் சர்ச்சையைக் கிளப்பியது. இவர்கள் என்ன கட்சிகளை வழிநடத்துவது என்று நினைத்தார்களோ என்னவோ, அதையெல்லாம் நீங்கள் சொல்லக்கூடாது, என்ன செய்வது என்று எங்களுக்குத் தெரியும் நீங்கள் ஆசனங்களைப் பங்கீடு செய்தால் போதும் அதில் யாரை நிறுத்துவது என்பதைக் கட்சிகள் தீர்மானித்துக்கொள்ளும் என்று குரலை உயர்த்தி உள்ளார்கள்.

இதையடுத்து அந்த விவகாரம் தொடர்ந்து கதைக்கப்படாமல் ஆசனப் பங்கீடு தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. கிழக்கில் பெரும்பாலும் பிரச்சினை இல்லை என்றாலும் வடக்கில் யாழ்ப்பாணம் மற்றும் வன்னி தேர்தல் மாவட்டங்களில் கட்சிகள் தமக்கு ஒதுக்கப்படவேண்டும் என்று கேட்கும் ஆசனங்களின் எண்ணிக்கை வேட்பாளர் எண்ணிக்கையைவிட அதிகமாக இருப்பதன் காணரமாக இணக்கம் எட்டப்படவில்லை. உதாரணத்திற்கு யாழ்ப்பாணத்தில் 9 வேட்பாளர்களைத்தான் நிறுத்த முடியும். அதற்கு புளொட், ஈபிஆர்எல்எவ், தமிழ்த் தேசியக்கட்சி ஆகியன தமக்கு இரு ஆசனங்கள் வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கின்றன. எஞ்சியிருக்கும் மூன்று ஆசனங்களைத்தான் ரெலோ, தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ்த் தேசிய பசுமை இயக்கம், ஜனநாயகப் போராளிகள் கட்சி மற்றும் பொதுச் சபையினர் பங்கிடவேண்டிய நிலை இருக்கிறது.

இந்த இடத்தில்தான் விக்னேஸ்வரன் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடமாட்டார், முன்மாதிரியாக இளைஞர்களுக்கு விட்டுக்கொடுக்கும் வகையில் மணிவண்ணன் போட்டியிடுவதற்காக தமது கட்சிக்கு ஒரு இடம் வழங்கப்பட்டால் போதுமானது என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆக மொத்தத்தில் 7 ஆசனங்கள் போனால் மிகுதி 2 ஆசனங்களை நான்கு பேர் பங்கிடவேண்டிய நிலை இருந்தது. இப்படிக் கட்சிகள் தமக்கு அதிக ஆசனங்கள் கேட்டதைத் தொடர்ந்து எழுந்த கோபத்தில் ஒரு கட்டத்தில் ஐங்கரநேசனும் அவரைத் தொடர்ந்து ஜனநாயகப் போராளிகள் கட்சியும் கூட்டத்தில் இருந்து வெளிநடப்புச் செய்ய முயன்றிருக்கின்றன. பொதுச்சபையினர் அவர்களுடன் பேசி ஒருவாறு சமாளித்து கூட்டம் முடியும் வரையில் அவர்களை இருத்தி வைத்திருந்தனர்.

இந்தக் கட்டத்தில், நாடாளுமன்றத் தேர்தலில் பொதுக் கட்டமைப்பாகப் போட்டியிடுவதா இல்லையாயின் அதில் இடம்பெற்றுள்ள கட்சிகள் போட்டியிட தாம் வெளியிலிருந்து ஆதரவளிப்பதா, சிவில் சமூகத்தினரான தாம் தேர்தல் அரசியலில் இறங்குவதா, பரப்புரை மேடைகளில் ஏறுவதா என்பது பற்றியெல்லாம் தமக்குள் கூடிப் பேசி ஆராய்வதற்கு இரு நாள் கால அவகாசம் தரும்படி கேட்டுக் கூட்டத்தை அத்தோடு முடித்துக்கொண்டனர் பொதுச் சபையினர். எனினும் வெளியேறும்போது நாடாளுமன்றத் தேர்தலில் பொதுக் கட்டமைப்பாகப் போட்டியிடுவது என்பது பொதுச் சபையினரான தமது முடிவிலேயே தங்கியிருக்கின்றது என்றும் தாம் மறுத்தால் பொதுக் கட்டமைப்பு தொடரமுடியாது என்றும் அதன் பிரதிநிதிகள் செய்தியாளர்களிடம் கருத்துப் பகிர்ந்து சென்றனர்.

அவர்கள் சென்ற பின்னரும் 7 கட்சிகளின் பிரதிநிதிகளும் தமக்குள் தொடர்ந்து பேசினர். இருந்தாலும் அவர்கள் வெளியேறும்போது பொதுச் சபையினரின் முடிவை எதிர்பார்த்திருக்கின்றனர் என்றும் அவர்களின் முடிவு தெரியவந்த பின்னர் அடுத்த கட்ட நகர்வு தொடர்பில் ஆராயப்படும் என்றும் தெரிவித்தனர். இதற்கிடையில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சின்னத்தை குத்துவிளக்கிலிருந்து சங்குக்கு மாற்றுவதற்கான சட்ட ரீதியான நடவடிக்கைகளில் புளொட் இறங்கவிருப்பதாக நேற்றிரவே தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது இந்தப் பிரச்சினையை மேலும் சிக்கலுக்கு உள்ளாக்கும் சாத்தியங்களை இன்னும் அதிகரித்திருக்கின்றது.

இன்னும் இரண்டு நாள்களில் பொதுக் கட்டமைப்பின் ஆயுள் காலம் தொடர்பில் ஒரு தெளிவான முடிவு வந்துவிடும்போலத்தான் இருக்கின்றது. என்றாலும் அதன் முடிவுகள் வெறுமனே யாழ்ப்பாணத்திலோ வடக்கு கிழக்கிலோ மட்டும் எடுக்கப்படுவதில்லை என்பதாலும் புலம்பெயர் தமிழர்களின் நலன்கள், விருப்பு வெறுப்புக்கள், தேவைகள் சார்ந்தே தீர்மானிக்கப்படும் என்பதாலும் அங்கிருந்து ஆட்டுவிப்பவர்களின் முடிவே பொதுக் கட்டமைப்பிற்கு உயிர் வழங்குவதா இல்லையா என்பதை முடிவுசெய்யும் என்று தெரிகிறது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இணக்கம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எட்டப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் தமிழ் மக்கள் பொதுச் சபையினர் தமக்குள் கலந்துரையாடி ஒரு தீர்மானத்தை வழங்குவதற்கு இரு நாள்கள் கால அவகாசம் தரும்படி கேட்கப்பட்டுள்ளதாக அதன் சார்பில் பேசிய அரசியல் பத்தி எழுத்தாளர் நிலாந்தன் தெரிவித்தார்.

அதனையடுத்து தமிழ் பொதுக்கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடுவதா, இல்லையா?, அவ்வாறு போட்டியிடுவதாயின் எந்தத் தரப்பின் சார்பில் போட்டியிடுவது? போட்டியிடவில்லை எனின் தமிழ் பொதுக் கட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளில் இருந்து போட்டியிடும் வேட்பாளர்களுக்காக பரப்புரை செய்வதா, இல்லையா? என்பன உள்ளடங்கலாக இதனுடன் தொடர்புடைய சகல விடயங்கள் குறித்தும் ஆராய்ந்து அறிவிப்பதற்கு 2 நாட்கள் கால அவகாசம் கேட்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

## ரணில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் சின்னம் தொடர்பில் இங்கு கூட்டணி அமையுமாயின் அதற்கு தேவையான அடிப்படை செயற்பாடுகள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மற்றும் கடந்த ஜனாதிபதி தேர்தலில் அவருக்கு ஆதரவளித்த ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவிலிருந்து பிரிந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு குழுவினருக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலும் நேற்று ஒரு சந்திப்பு இடம்பெற்றது.

# புதிய ஜனாதிபதிக்கு ஆதரவு உலக வங்கியும் தெரிவித்தது

இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் அபிவிருத்திக்கு ஆதரவளிப்பதற்கு உலக வங்கி குழு தனது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளது.

உத்தியோகபூர்வ கடிதத்தில், உலக வங்கியின் தெற்காசிய பிராந்தியத்திற்கான துணைத் தலைவர் மார்ட்டின் ரைசர் மற்றும் சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தின் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான துணைத் தலைவர் ரிக்கார்டோ புலிட்டி ஆகியோர் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவுக்கு ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதற்கு அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன், தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் பொருளாதார மறுசீரமைப்புக்கு மாநிலத்தின் தொடர் கவனம் தேவை என்பதை அங்கீகரிக்கும் அதேவேளையில், 'வளர்ச்சி, செழிப்பு மற்றும் வளர்ச்சிக்கான வாய்ப்புகள் சமமாக முக்கியத்துவம் வாய்ந்தவை' என்று கடிதம் கூறுகிறது.

புதிய நிர்வாகத்தின் தலைமையின் கீழ் உள்ளடங்கிய வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும், நாட்டின் மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கும் உலக வங்கி குழுவின் உறுதிப்பாட்டை இந்தக் கடிதம் உறுதிப்படுத்துகிறது.

## ஐக்கிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த முன்னாள் நாடா-ளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் நிறுவுனர் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கவின் நினைவு தினம் நேற்று காலி முகத்திடலில் உள்ள அவரது உருவச் சிலைக்கு முன்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தயாசிறி மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய ஆளும் தரப்பு வாகனங்களை காலி முகத்திடலில் நிறுத்தி கண்காட்சி நடத்திக் கொண்டிருக்கிறது.

2015இல் ஜோன் அமரதுங்க இதே போன்றதொரு நாடகத்தை அரங்கேற்றினார். தற்போது இந்த வாகனங்களைப் பார்த்து மக்கள் அரசியல்வாதிகளையே விமர்சிக்கின்றனர்.

கடந்த ஆட்சியில் அதிகாரிகள் பயன்படுத்திய வாகனங்களே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவற்றையே அநுர திஸாநாயக்கவின் ஆட்சியிலும் அதிகாரிகள் பயன்படுத்த நேரிடும்.

மக்களை ஏமாற்றுவதற்காக இவ்வாறு கண்காட்சிகளை நடத்திக் கொண்டிருக்காமல், அந்த வாகனங்களைக் குத்தகைக்கு வழங்கி வருமானத்தை பெறுமாறும், அரச சேவைகளுக்குச் செல்லும்போது முச்சக்கரவண்டிகளில் செல்லுமாறும் தற்போதைய ஆளும்தரப்பினருக்கு ஆலோசனை வழங்குகின்றோம். இவை தற்காலிகமாக அரங்கேற்றப்படும் நாடகங்கள் ஆகும் -என்றார்.

## போதியளவு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களையும் வினைத்திறனுடன் முன்னெடுப்பதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி அடுத்த வருடத்திற்குத் தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதில் கவனம் செலுத்துமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். இந்த செயற்பாடுகளுக்கு ஜனாதிபதி என்ற வகையில் தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் அதிகாரிகளுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று அதிகாரகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இதனைத் தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் வெளிநாடுகளில் இருந்து பெறப்படும் கடனுதவிகளின் அடிப்படையில் செயல்படுத்தப்படும் திட்டங்களைத் துரிதப்படுத்துவதன் அவசியத்தை தெளிவுபடுத்திய ஜனாதிபதி வெளிநாட்டு உதவியின் கீழ் செயற்படுத்தப்படும் திட்டங்களுக்கு மூன்று மாதங்களுக்குள் ஒப்புதல் வழங்க ஒரு குழுவை நியமிக்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். இதன் மூலம் வெளிநாட்டு உதவியின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் திட்டங்களை விரைவுபடுத்த முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கிராமிய அபிவிருத்தித் திட்டங்களை விரைவுபடுத்தி கிராமத்திற்கு பணம் கிடைக்கும் வகையிலான முறைமையொன்றை ஏற்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதிஇ இதன் ஊடாக பொருளாதாரத்தை விரைவாக பலப்படுத்த முடியும் என்றும் தெரிவித்தார். இந்தச் செயற்பாடுகளில் அதிகாரிகளுக்கு பெரும் பங்கு இருப்பதாகவும் அதற்கு அதிகாரிகளின் அர்ப்பணிப்பு மிகவும் அத்தியாவசியமானது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க வலுசக்தி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் உதயங்க ஹேமபால உள்ளிட்ட அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர் என்று ஜனாதபதி செயலகம் தெரிவித்தது.

## பாடசாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்களின் கல்வியில் கவனம் சிதறி பாடசாலை சூழலை அரசியலாக்கும் அபாயம் ஏற்படும் எனத் தெரிவித்தார்.

ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதில் வெளிப்படைத்தன்மையின் அவசியத்தை வலியுறுத்திய அவர், பொதுமக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்பும் வகையில் செயல்முறை முறையாக நடத்தப்படவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மாணவர்களின் மனநலம் குறித்து உரையாற்றிய அவர், தற்போதைய தலைமுறையினர் கணிசமான சவால்களை எதிர்கொள்கின்றனர், இதில் கொவிட்-- 19 தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி ஆகியவை மாணவர்களிடையே மன அழுத்தத்தை அதிகரித்துள்ளன.

அண்மைய தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள் கசிவுக்கு விரைவான மற்றும் நியாயமான தீர்வு காணப்படவேண்டும் என்றும், பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்றும் அமைச்சர் உறுதியளித்தார். இந்த விடயம் தொடர்பில் சுயாதீன அறிக்கை ஒன்றின் அவசியத்தை அவர் வலியுறுத்தியதுடன், தாமதமான அனைத்துப் பரீட்சை பெறுபேறுகளையும் உடனடியாக வெளியிடுமாறு பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவுறுத்தினார்.

## நவம்பர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்களிப்பும் இடம்பெறவுள்ளது.

2016ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கூரகல பள்ளிவாசல் தொடர்பில் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்த கருத்து தேசிய மற்றும் மத நல்லிணக்கத்துக்குப் பங்கம் விளைவித்ததாகக் கூறி கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் ஞானசார தேரருக்கு எதிராக போதுமான சாட்சிகள் இல்லாத காரணத்தினால் அவரை விடுதலை செய்யுமாறு ஞானசார தேரர் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றில் வாதாடி இருந்தார்.

இந்த வழக்கு தொடர்பான தீர்ப்பு எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி அறிவிக்கப்படும் என இன்று உத்தரவிட்டுள்ளார்.

## தமிழ் அரசு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு மாகாணத்தை சேர்ந்தவருக்கு வாக்களிக்கமாட்டார்கள் என்ற பரப்புரை எனக்கு எதிராக கிழக்கு மாகாணத்தில் முன்வைக்கப்பட்டது. அந்த பிரதேசவாதம் தற்பொழுது முறியடிக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியத்திற்காக வாக்களித்த அனைவருக்கும் நன்றிகள். பொதுவேட்பாளரை தோற்கடிப்போம் என்று கூறியவரின் சொந்தத் தொகுதியையே நாங்கள் கைப்பற்றியிருக்கின்றோம்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# தமிழ் மக்களின் நீண்டகால துயரங்களுக்கு தீர்வு காண்பதற்கு அநுரகுமார நடவடிக்கை எடுப்பார் என எதிர்பார்க்கின்றோம்

## உலகத் தமிழர் பேரவை நம்பிக்கை

தமிழ் மக்கள் சொந்த நாட்டில் இரண்டாம்தர பிரஜைகள் போல உணர்வதற்குகாரணமானநீண்டகால துயரங்களிற்கு தீர்வை காண்பதற்கு ஜனாதிபதி அநுரகுமாரதிசநாயக்க அர்த்தபூர்வமன நடவடிக்கைகளை எடுப்பார் என எதிர்பார்க்கின்றோம் என உலகதமிழர்பேரவைதெரிவித்துள்ளது.

அறிக்கையொன்றில் இதனை தெரிவித்துள்ள உலகதமிழர் பேரவை மேலும் குறிப்பிட்டுள்ளதாவது -

சாதாரணபின்னணியில்ஆரம்பித்து தனது அரசியல் வாழ்க்கை முழுவதும் சாதாரண பொதுமக்களின் நபராக விளங்கியஅனுரகுமாரதிசநாயக்கவின் அரசியல்பயணம்அவரது சாதனைகள் அனைத்து பின்னணியை சேர்ந்த இளைஞர்களும் பெரும் கனவு காண தூண்டும்.

புதியபிரதமராகநியமிக்கப்பட்டுள்ள ஹரிணி அமரசூரியவிற்கும் நாங்கள் எங்கள் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம், இலங்கையின் வரலாற்றில்மூன்றாவதுபெண்பிரதமர்.

தேர்தலும் அதிகாரமாற்றமும் அமைதியான முறையில் இடம்பெற்றமை குறித்து திருப்தியடைகின்றோம்,இதன் மூலம் பல உலகநாடுகள் பின்பற்றவேண்டியமுன்னுதாரணமாக திகழ்ந்துள்ளது.

தேர்தல் பிரச்சாரம் பெருமளவிற்கு இனமத பேரினவாத கருத்துக்கள் அற்றனவாக காணப்பட்டன என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம்,இது எதிர்காலத்திற்கான முன்னுதாரணமாக விளங்கும் என எதிர்பார்க்கின்றோம்.

எந்த வித சந்தேகமும் இன்றி இலங்கை தனது வரலாற்றின் தீர்க்கமான தருணத்தில் உள்ளது,பொருளாதார நெருக்கடி மற்றும் சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் வேருன்றியிருக்கும் ஊழலும் மக்கள் அமைப்பு மாற்றத்தை விரும்புவதை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி அனுரகுமாரதிசநாயக்கவும் தேசிய மக்கள் சக்தியும் முன்னெடுத்த பிரச்சாரம் மில்லியன் கணக்காண மக்களிடையே நன்கு எதிரொலித்துள்ளது.

எனினும் மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் பொருளாதாரசமூகமாற்றங்களைகொண்டுவருவதில் தற்போதையஜனாதிபதிகடும்சவாலைஎதிர்கொள்வார் என நாங்கள் கருதுகின்றோம்.

நாட்டின் அனைத்து குடிமகனும் சமூகமும் அதன் வளர்;ச்சிப்பாதையில் சமபங்குதாரராக உணரும்போதுதான் உண்மையான மாற்றம் நிகழும் என உலகதமிழர் பேரவை உறுதியாக நம்புகின்றது.

புதிய ஜனாதிபதியும் அவரது கூட்டணி கட்சிகளும் அவர்கள் குறித்து சிறுபான்மை சமூகத்தினர் கொண்டுள்ள கணிசமான நம்பிக்கை பற்றாக்குறைக்கும் அச்சத்தி;ற்கும் இன்னமும் தீர்வை காணவில்லை என்பது தேர்தல் முடிவுகள் மூலம் நன்கு தெரியவந்துள்ளது.

பல தசாப்தங்களாக இலங்கையில் உள்ள தமிழ் மக்கள் சமத்துவம் நீதி மற்றும் நியாயமான பிரதிநிதித்துவம்தொடர்பில்குறிப்பிடத்தக்கசவால்களை எதிர்கொண்டுள்ளதுடன் அரசாங்கத்தின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் மூலம் தங்கள் மொழி இனஅடையாளங்களை இழப்பது குறித்து அச்சமடைந்துள்ளனர்.

உள்நாட்டுயுத்தத்தினதும்அதன் எச்சங்களினதும் தாக்கங்கள் தீர்வின்றி அந்த மக்களை அச்சுறுத்துகின்றன.

மேலும் பிராந்தியங்களிற்கான அர்த்தபூர்வமான அதிகார பகிர்விற்கான அவர்களது எதிர்பார்ப்புகள் இன்னமும் நிறைவேற்றப்படாமல் உள்ளன.

தமி;;ழ் மக்கள் சொந்த நாட்டில் இரண்டாம்தர பிரஜைகள் போல உணர்வதற்கு கருதுவதற்கு காரணமான நீண்ட கால துயரங்களிற்கு தீர்வை காண்பதற்கு ஜனாதிபதி அனுரகுமாரதிசநாயக்க அர்த்தபூர்வமன நடவடிக்கைகளை எடுப்பார் என எதிர்பார்க்கின்றோம்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தி;ல் ஆரம்பிக்கப்பட்ட அரசமைப்பு வரைபினை விரைவாக முடிப்பதற்கும்,உள்ளுராட்சி அமைப்புகள் மாவட்டங்கள் மற்றும் மாகாணங்களுடன் அரசியல் மற்றும் நிர்வாக அதிகாரங்களை பகிர்ந்துகொள்வதற்கும் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனம் உறுதியளித்துள்ளமை குறித்து நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம்.(05)

# தியாக தீபம் திலீபனின் 37ஆவது நினைவேந்தல்













தியாகதீபம்திலீபனின் 37ஆவது நினைவேந்தல் நேற்று (வியாழக்கிழமை) நாட்டின்தமிழர்பகுதிகளில் நடைபெற்றது.

முல்லைத்தீவு - கள்ளப்பாடு வடக்கு பகுதியில் அமைந்துள்ள முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனின் மக்கள் தொடர்பகத்தில் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

மௌன அஞ்சலியுடன் தொடங்கிய இந்நினைவேந்தலில், தியாகி திலீபனின் உருவப்படத்துக்கு மலர் தூவி சுடரேற்றப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வில் முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர் அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன் ஆகியோருடன் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்;டனர்.





## கிளிநொச்சி



தியாக தீபம் திலீபனின் 37 ஆவது நினைவேந்தல் நேற்று காலை 10 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள இலங்கை தமிழரசு கட்சியின் அலுவலகமான அறிவகத்தில் நடைபெற்றது.

இதன்போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கதியாகி திலீபனின் 37 ஆவது நினைவுதினம் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் அனுஷ்டிக்கபட்டது.

## வவுனியா

அவர்கள் தொடர்ச்சியாக போராட்டம் நடத்திவரும் வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு முன்பாக அமைந்துள்ள கொட்டகையில் இந்த நினைவேந்தல் நடைபெற்றது.



இதன்போது திலீபனின் திருவுருவப்படத்துக்கு மலர் தூவி, ஈகைச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர் கருத்து தெரிவிக்கையில் -

எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளுக்கும், தமிழர்களுக்குமான தீர்வு கிடைக்கும் என்பதில் எமக்கு நம்பிக்கை இல்லை. சர்வதேச வழிமுறையூடாகவே எமது பிள்ளைகளை கண்டுபிடிக்க முடியும். நாம் அமெரிக்க ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒத்துழைப்புக்களை நாடியே எமது போராட்டங்களை முன்னெடுத்து நிற்கின்றோம். (05)

# நாட்டில் மார்பக புற்றுநோய் உயிரிழப்புக்கள் அதிகரிப்பு

நாட்டில் மார்பக புற்றுநோய் காரணமாக இடம்பெறும் மரணங்கள் அதிகரித்துள்ளன எனத் தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டம் தெரிவித்துள்ளது.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்ட சமூக சுகாதார வைத்திய நிபுணர் ஹசரெலி பிரனாந்து இது தொடர்பில் தெரிவிக்கையில் -

நாட்டில் வருடாந்தம் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மார்பக புற்றுநோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.

அவர்களில், 5500 பேர் பெண்களாகவும் 125 பேர் ஆண்களாகவும் காணப்படுகின்றனர்.

நாட்டில் பெண்கள் மத்தியில் மார்பக புற்றுநோய் பாதிப்பு அதிகரித்து வருகின்றது.

மார்பகங்களில் கட்டிகள் தோன்றுதல், மாற்றங்கள் ஏற்படுதல், வீக்கம் ஏற்படுதல் மற்றும் சிவந்து காணப்படுதல் என்பன மார்பக புற்றுநோய்க்குரிய அறிகுறிகள் ஆகும்.

எனவே இத்தகைய, அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக வைத்தியசாலைக்குச் செல்லுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## வரவேற்பும் எச்சரிக்கையும்

விவசாயிகளுக்கான உர மானியத்தை 10 ஆயிரம் ரூபாயால் அதிகரிப்பதற்கு அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க உத்தரவிட்டுள்ளார்.

2024/2025 ஆம் ஆண்டு பெரும்போக காலத்தில் இந்த மானிய அதிகரிப்பை வழங்கும்படி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க திறைசேரிக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். ஹெக்டேயர் ஒன்றுக்கு இதுவரை வழங்கப்பட்டுவந்த 15,000 ரூபாய் உரமானியத்தை 25,000 ரூபாயாக அதிகரிக்கும்படி அரசுத் தலைவர் உத்தரவிட்டிருக்கின்றார் என்று அவரது ஊடகப் பிரிவு அறிவித்திருக்கின்றது.

காலபோக விதைப்பு தொடங்கவுள்ள நிலையில் ஐப்பசிமாதம்முதலாம்திகதியில்இருந்துநடைமுறைக்கு வருகிறது. இந்த மானியம் விவசாயிகளுக்கு உரியவாறு கிடைக்கக்கூடிய வகையில் நேரடியாக அவர்களது வங்கிக்கணக்கில் வைப்பிலிடப்படும்.

அதேவேளை பின்னடைவை எதிர்கொண்டிருக்கும் மீன்பிடித்தொழிலைஊக்குவித்து,உற்பத்திச்செலவைக் குறைப்பதற்காகஐப்பசிமாதம்முதலாம்திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மீனவர்களுக்கு எரிபொருள் மானியத்தை வழங்குமாறும் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க திறைசேரிக்குப் பணிப்புரை விடுத்துள்ளார் என்றும் அவரது ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய ஆழ்கடல் மற்றும் நாளாந்த படகுகளுக்கு மாதாந்த அடிப்படையில் எரிபொருள் மானியம் வழங்கப்படவுள்ளது. இந்த மானியம் மீனவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக வைப்புச்செய்யப்படும்.

இந்த இரண்டு செய்திகளும் மகிழ்ச்சிக்குரியன. தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அறிக்கையில் இவைஏற்கனவேஅறிவிக்கப்பட்டும்இருந்தன. அரசுத் தலைவராகப் பதவியேற்றுள்ள நிலையில் அதனை நிறைவேற்ற அநுரகுமார திசநாயக்க நடவடிக்கை எடுத்திருப்பது என்பது பாராட்டப்படவேண்டியதுதான். காலபோகச் செய்கை தொடங்கவுள்ள நிலையில் நேரகாலத்துடனேயே இந்த மானிய அறிவிப்பு வந்திருப்பது விவசாயிகளுக்கு மகிழ்ச்சியான செய்தி. அதுபோன்றே எரிபொருள் மானியம் குறித்த அறிவிப்பு மீனவர்களுக்கும் வயிற்றில் பால் வார்த்துள்ளது.

மக்களுக்கு வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசுத் தலைவர் நடவடிக்கை எடுத்திருப்பதை வரவேற்றுப் பாராட்டும் அதேவேளை, அரசின் வருமானத்தை அதிகரிப்பதற்கு அவர் எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைகள் பற்றிய அறிவிப்புக்களையும் நாட்டு மக்கள் அவரிடமிருந்து எதிர்பார்க்கிறார்கள். வருமான அதிகரிப்பு இன்றி மானியங்களையும் நிவாரணங்களையும் மட்டும் வழங்குவது எதிர்க் கட்சிகள் குற்றஞ்சாட்டியதைப் போன்று இலங்கையை மீண்டும் பொருளாதார சிக்கல்களுக்குள் பெரிதும் ஆழ்த்திவிடவல்லது என்பதால் தேசிய வருமானத்தை அதிகரிப்பதற்கும் அரசுத் தலைவர் நடவடிக்கை எடுப்பதுடன் அது குறித்துமக்களுக்குத்தெரியப்படுத்துவதும்அவசியம்.

# பாதிக் கிணறு

**என். சத்திய மூர்த்தி**

நடந்துமுடிந்தஜனாதிபதிதேர்தலில்தேசியமக்கள் சக்திஅணியின்சார்பில்போட்டியிட்டமக்கள்விடுதலை முன்னணி வேட்பாளர் அனுர குமார திசநாயக வெற்றிபெற்று, பதவியேற்று, பாராளுமன்றத்தை கலைத்து, நவம்பர் 14ம் தேதி அடுத்த தேர்தல் என்றும் ஒரே மூச்சில் செய்து முடித்துவிட்டார். இடைப்பட்ட இரண்டொரு மணிதியாலங்களிலும் நாட்களிலும் கூட, பாராளுமன்றத்தையே சந்திக்கப்போவதில்லை என்ற அளவில், ஹரிணி அமரசூர்யாவை நாட்டின் மூன்றாவது பெண் பிரதமராகவும் அறிவித்து, அவருக்கு பதவி பிரமாணமும் செய்து வைத்துள்ளார். ஏன், அனுரவும் தான் அந்த பதவியில் சந்திக்காத பாராளுமன்றத்தை கலைத்த முதல் ஜனாதிபதி என்று அறியப்படுவார்.



இது போதாது என்று, ஜனாதிபதி அனுர முதல் நாளே, கண்டியில், பௌத்த மத தலைமை பீடாதிபதிகளை சந்தித்து அவர்களது ஆசிகளை பெற்றுக்கொண்டார். தலைநகர் கொழும்புவில் ஒரு இஸ்லாமிய பள்ளிவாசலையும் விஜயம் செய்தார்.

அது போன்றே, கத்தோலிக்க கிறித்தவ பேராயர் மால்கம்கர்தினால்ரஞ்சித்பெருந்தகையையும்சந்தித்து பேசியுள்ளார். இதன் பொருள், இந்த முறை சிங்கள கத்தோலிக்க கிறித்தவர்களும் மக்கள் விடுதலை முன்னணிக்கேவாக்களித்துள்ளனர்என்பது. அதனை தொடர்ந்து, பேராயர் கோரி வருவதைப்போல், 2019 உயிர்த்த ஞாயிறு தொடர் குண்டு வெடிப்பு சம்பத்துடன் தொடர்புடையவர்களை சட்டத்தில் முன் நிறுத்தி தண்டனை வாங்கி கொடுப்பதாக கொடுத்த தேர்தல் வாக்குறுதியை தான் மறந்துவிட மாட்டேன் என்ற உறுதிமொழி.

இடைப்பட்ட நேரத்தில், ஜனாதிபதி அனுர, பல்வேறு துறைகளுக்கும் புதிய செயலாளர்களையும், பல்வேறு மாகாணங்களுக்கு புதிய ஆளுனர்களையும் நியமித்து உத்தரவு பிறப்பித்துள்ளார். அவர்களில் பலரும் தத்தமது பதவிகளை ஏற்றுக்கொண்டு செயலாற்றவும் தொடங்கி விட்டனர். தமிழர்கள் பெருமளவில் வாழும் வட மாகாணத்திற்கும், முந்தைய தமிழ் ஆளுனருடைய இடத்தில், புதிதாக ஒரு தமிழ் ஆளுனரையே நியமித்துள்ளார். புதிதாக நியமிக்கப்பட்டுள்ள நாகலிங்கம் வேதநாயகம,; கறைபடியாத கரங்களுக்கு சொந்தகாரர் என்று அறியப்படுபவர்.

மற்றபடி, தேசிய மக்கள் சக்தி ஆகட்டும், அல்லது அனுரவை எதிர்த்து தோல்வி கண்ட ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் சஜித் பிரேமதாசா ஆகட்டும், அல்லது பதவியில் இருந்தும் மூன்றாவது இடத்திற்கே வந்த ஐக்கிய மக்கள் கட்சியின் ரணில் விக்கிரமசிங்க ஆகட்டும், அவர்கள் அனைவருமே பாராளுமன்ற தேர்தல் உத்திகளை வகுக்க துவங்கி விட்டனர். தன் பங்கிற்கு, தற்போது எழுபத்தைந்து வயதாகும் ரணில், தான் தேர்தல் அரசியலில் இருந்து பிரியாவிடை பெறுகிறார். இத்துடன் மறைந்துவிட்ட, மறந்துபட்ட சம்மந்தனையும் சேர்த்து நாட்டின் இரண்டு மூத்த பாராளுமன்ற உறுப்பினர்களும் இல்லாமலே, தேர்தல் முடிந்து புதிய அவை கூடும்.

தனது பங்கிற்கு, சஜித், வழக்கம் போலவே, தனது அணிக்கு தான் தான் பிரதமர் வேட்பாளர் என்று தன்னிச்சையாக பிரகடனப்படுத்தி உள்ளார். இவ்வாறு தான், பல மாதங்களுக்கு முன்னரே, அவர் தன்னை தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராக அறிவித்துக்கொண்டு செயலாற்ற துவங்கினார். ஆனால் தேர்தல் அடுத்துவந்த பின்னரே, தமிழ் அரசு கட்சி உள்ளிட்ட குறிப்பாக சிறுபான்மையினரின் அரசியல் தலைமைகள் தங்களது ஆதரவை அவருக்கு தெரிவித்தது. அதாவது, தற்போதைய தேர்தல் சூழலில், தன்னை விட்டால் அவர்களுக்கு வேறு கதி இல்லை என்ற மமதையுடன் அவர் இவ்வாறு தொடர்ந்து செயலாற்றுவது போன்ற எண்ணத்தை தோற்றுவிக்கிறார்.

### குதிரை சவாரி

இது இப்படி என்றால், இங்கே, தமிழர் தரப்பில் அரியநேத்திரன் என்ற பொது வேட்பாளர் மீது ஏறி குதிரை சவாரி செய்த கனவான்கள், இப்போது தங்களது எதிர்கால அரசியல் பிழைப்பு இல்லாமலே போய்விடுமோ என்ற கவலையில் ஆழ்ந்துள்ளார்கள். ஜனாதிபதி தேர்தல் வாக்கு சதவீதத்தை வைத்து பார்த்தால் யாழ்பாண மாவட்டத்திலிருந்து பாராளுமன்ற உறுப்பினராக கடந்த முறை தேர்ந்தெடுக்கபட்ட ப்ளொட் அமைப்பின் சித்தார்தன் மற்றும் தமிழ் மக்கள் தேசிய முன்னணியின் விக்னேஸ்வரன் மட்டுமே அடுத்த முறை தேர்வாகும் வாய்ப்பு உள்ளது.

இதுவே, கிளிநொச்சி மாவட்டத்தை பிரதிநிதிப்படுத்திய சிறீதரனுக்கும் பொருந்தும். ஆனால், அவர், தான் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் அரசு கட்சியின் உறுப்பினராக தொடர்ந்து செயலாற்றப் போகிறாரா, இல்லையா, என்பது இன்னமும் கேள்விகுறி தான்.

அந்தவிதத்தில், சஜித்தை ஆதரித்த சுமந்திரன் வகையறா தலைமையிலான தமிழ் அரசு கட்சியின் அணியினர், தங்களுக்கு தான் தமிழ் வாக்களர்களிடையே அதிக செல்வாக்கு இருக்கிறது என்று மார்தட்டிக் கொண்டால், அதுவும் தவறான வாதமே.

காரணம், சஜித்தின் அளவிற்கு இல்லாவிட்டாலும், மூன்றாவது இடத்திற்கு வந்த ரணிலும் கணிசமான அளவில் தமிழ் வாக்குகளை பெற்றிருந்தார். இன்னும் சொல்லப்போனால், கடந்த முறைகள் போல இந்த தேர்தலிலும் சஜித், ரணில் அணிகள் சேர்ந்து செயல்பட்டிருந்தால், மற்ற சிறுபான்மையின மக்களின் வாக்குகளையும் சேர்த்து வைத்து பார்த்தால், அனுரவின் வெற்றிவாய்ப்பு இன்னமும் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்றும் எண்ணத்தோன்றுகிறது.

### துரோகி பட்டம்

ஆனால், தற்போதைய தமிழ் அரசு கட்சியின் தலைவலியே, பாராளுமன்ற தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தான். சஜித்திற்கான தமிழ் வாக்காளர்களின் ஆதரவு தங்களால் தான்

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

# பாதிக் கிணறு

4ம் பக்க தொடர்ச்சி..........

சாத்தியமாயிற்று என்று கூறிக்கொள்ளும் சுமந்திரன் அணியினர், பாராளுமன்ற தேர்தலை அவரது தேசிய மக்கள் சக்தியுடன் சேர்ந்து சந்திப்பார்களா, என்ன?

கடந்த காலங்களில், குறிப்பாக மஹிந்த ராஜபக்சா காலம் துவங்கி, கடந்த இருபது வருடங்களாக. இன்றைய தமிழ் அரசு கட்சி தலைமைத்துவம் வழங்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பு. ஜனாதிபதி தேர்தலில் அந்த குடும்பத்தை எதிர்த்து போட்டியிடும் தென்னிலங்கை வேட்பாளரை ஆதரிக்கும். ஆனால், பாராளுமன்றம் மற்றும் மாகாணசபை தேர்தலில் தனித்து போட்டியிடும்.

இந்த முறை, தமிழ் அரசு கட்சி தாங்கள் ஆதரித்த சஜித்திற்கே அதிக தமிழர் வாக்குகள் கிடைத்திருக்கிறது என்று கூறிக்கொண்டாலும், முன்னாளைய தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பு கட்சிகளின் வாக்குகளை அது இழந்துவிட சாத்தியமிருக்கிறது. குத்துமதிப்பாக, பொது வேட்பாளர் அரியநே;திரன் பெற்ற வாக்குகள் எல்லாம், தமிழ் அரசிற்கு எதிரான வாக்குகளே.

அது போன்றே, ரணில் ஆதரவு கட்சிகளான டக்ளஸ் தேவானந்தாவின் ஈழ மக்கள் ஜனநாயக கட்சி மற்றும் சுதந்திர கட்சியின் அங்கஜன் ராமனாதன் ஆகிய இருவரின் வாக்குகளும் பிற அனைத்து தமிழ் கட்சிகளுக்கும் எதிரான வாக்குகளே. இதுவே கிழக்கு மாகாணத்தில் பிள்ளையான் போன்றோரின் வாக்கு வங்கிகளுக்கும் பொருந்தும

மாறுபட்ட தேசிய அரசியல் சூழலில் இந்த வாக்குகள் அனைத்துமே தமிழ் வாக்குகளாக கருதப்பட வேண்டும். ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் என்ற திட்டத்தை முன் வைத்து தவறிழைத்தவர்கள் அதே தவறை மீண்டும் செய்யலாகாது.; இன்னும் சொல்லப்போனால், வடக்கிலும் கிழக்கிலும் உள்ள அனைத்து தமிழ் பேசும் மக்களின் அரசியல் தலைமைகளையும் வாக்குகளையும் ஒருங்கிணைத்து ஒரு சேர முன் செல்ல வேண்டியது காலத்தின் கட்டாயம். அதனை இவர்கள் யாராவது புரிந்து செயலாற்றப் போகிறார்களா, என்பதே கேள்வி.

### மண் குதிரையை நம்பி...

உண்மையை சொல்லப்போனால், பொது வேட்பாளர் கருத்தாடலை முன்னெடுத்த சமூக ஆர்வலர்கள் விட்ட முக்கிய பிழைகள் மூன்று. முதலாவது, தமிழ் சமூக-அரசியல் பரப்பில் அடிப்படை ஆதரவே இல்லாத அவர்களது முயற்சிக்கு ஊக்கம் கொடுத்த அனைவருமே மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கிய கதையின் முடிவை தான் சந்தித்தார்கள். அதனால் தான், சுரேஷ் பிரேமசந்திரன், ஸ்ரீகாந்தா, சிவாஜிலிங்கம் போன்ற பதவி இழந்த தலைவர்கள் மட்டுமே அரியநேத்திரன் பின்னால் முழு மனதுடன் சென்றார்கள். அவர்களுக்கு, அந்த முயற்சி, வைத்தால் குடுமி, எடுத்தால் மொட்டை என்ற கதை தான்.

ஆனால், கலைக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தலைமைத்துவம் நல்கிய ப்ளொட் மற்றும் ரெலோ போன்ற கட்சியினரின் நிலை அவ்வாறில்லை. தங்களது பாராளுமன்ற உறுப்பினர்பதவிகளைதக்கவைத்துக்கொள்ளபொதுவேட்பாளர் ஆதரவு களம் பயனில்லை என்றால், அவர்களுக்கு, அந்த கருத்தியலை ஆதரிக்கும் சுமந்திரனின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ள தமிழ் அரசு கட்சியின் பின்துணை தேவையாய் இருக்கலாம். இந்த உண்மையை அவர்கள் உணர்ந்திருந்ததால் தான், அரியநேத்திரனுக்கான அவர்களது ஆதரவு, ஆற்றில் ஒரு கால், சேற்றில் ஒரு காலாக இருந்தது.

அது போன்றே, இனப்பிரச்சினை குறித்த தமிழ் மக்களின் தொடரும் கவலைகள் மற்றும் கரிசனைகளை தென்னிலங்கைக்கு அறியப்படுத்தவே பொது வேட்பாளரை களமிறக்கிறோம் என்று மார்தட்டி புறப்பட்ட சமூக ஆர்வலர்கள், ஏனோ, தமிழ் மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் டக்ளஸ், பிள்ளையான் மற்றும் அங்கஜன் ராமநாதன் போன்றோரை எதிரிகளாகவே தொடர்ந்து பார்த்தனர். இதுவே, தமிழ் அரசு கட்சியின் நிலைபாடும்.

குறிப்பாக, இவர்கள் அனைவரை பொறுத்தவரையிலும் டக்ளஸ்மற்றும்பிள்ஷ்ளையான்போன்றோர், விடுதலைபுலிகள் அமைப்பு விட்டுச்சென்ற 'துரோகி' என்ற அடைமொழியாலேயே அறியப்பட்டனர். இன்னமும் நிலைமை அப்படிதான். விடுதலை புலிகள் அமைப்பே காணாமலான பின், அவர்களது ஆதரவு புலம்பெயர்ந்தோர் அமைப்புகளின் ஆட்டத்திற்கு எல்லாம், இங்கிருக்கும் அவர்களது நிழல் உறவுகள் எத்தனை நாள் தான் ஆட போகிறார்கள்?

### முக்கோண போராட்டம்

தற்போது, பாராளுமன்ற தேர்தலை முன்னிறுத்தி, அனைத்து தமிழ் கட்சிகளும், அமைப்புகளும் மீண்டும் மறந்துபட்ட உறவுகளை புதுப்பித்தன் வேண்டும். அதற்கான முயற்சிகளை தமிழ் அரசு கட்சி முன்னின்று எடுத்தால் மட்டுமே, பாதி கிணற்றையாவது தாண்டமுடியும். ஆனால், அங்கும் மாவை சேனாதிராஜா, சுமந்திரன், சிறீதரன் ஆகியோரின் முக்கோண போராட்டமே முன்னிற்கும். நாளை நடைபெற இருக்கும் கட்சியின் மத்திய குழு கூட்டத்திலும் இந்த அக்கபோர் அரசியலே முன்னிலை வகிக்கும்.

ஆனால், அதற்கு, சுமந்திரன் கொள்கை சாயம் பூசுவார். சிறீதரன் இனச்சாயம் அடிப்பார். சேனாதிராஜாவோ தனது இரண்டும்கெட்டான் நிலையில் தொடர்ந்து, கேலிக்குள்ளாவார். ஆனால், அனைத்து தமிழர்களையும் ஒருங்கிணைப்பதை விட்டுதள்ளுங்கள், நாளைய கூட்டத்தில் தமிழ் அரசு கட்சியில் பாராளுமன்ற தேர்தல் வரையிலாவது ஒற்றுமை நிலவும் சூழ்நிலை உருவாகவில்லை என்றால், அடுத்த கிழமையே, ஏதோ ஒரு தரப்பினர், தாங்கள் தான் உண்மையான தலைமை என்று கூறிக்கொண்டு தேர்தல் ஆணையத்தை அணுகலாம். தொடர்ந்து நீதிமன்ற கதவுகளையும் தட்டலாம்.

அவ்வாறு நிகழுமேயானால், அதன் விளைவுகள் காரணமாக தமிழ் அரசு கட்சியின் பிரபலமான 'வீடு' தேர்தல் சின்னம் இடை நிறுத்தப்படலாம். அது வழக்கின் சாரம்சத்தை பொறுத்ததே தவிர வழக்கறிஞரின் மதிநுட்பத்தை மட்டுமே சார்ந்ததாக இருக்காது. உண்மை தான். இதனை தானே, பொது வேட்பாளர் கருத்தியலை ஆதரித்த பல்வேறு தரப்பினரும் விரும்புவார்கள்?

ஆனால், என்ன, தற்போதைய சூழலில், நாளைய தமிழ் அரசு கட்சி கூட்டத்தில் சுமந்திரன் அணியின் கையே ஓங்கி இருக்கும் என்று எதிர்பார்க்கலாம். மற்ற தரப்பினர்கள் ஒன்றில் அடக்கி வாசிக்க வேண்டும். அல்லது, தலைவர் சேனாதிராஜாவையும் கையில் போட்டுக்கொண்டு பிரச்சினைகளை ஊதி பெரிதாகாக்க வேண்டும். ஆனால் நாளை கூடும் மத்திய குழுவின் முடிவுகள் தேர்தல் ஆணையத்தையும், நீதிமன்றங்களையும் கூட இடைப்பட்ட காலத்தில் மட்டுமாவது என்ற உண்மையையும் நடத்தும் என்பதனையும் அவர்கள் உணர்ந்தே செயல்பட வேண்டும்.


ஆனால், இந்த இடைப்பட்ட காலத்தில், இருதரப்பினருக்குமே, நேரம் விலைமதிப்பற்றதாக மாறி இருக்கும். காரணம், பாராளுமன்ற தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்துதல், நியமன பட்டியல்கள் சமர்ப்பித்தல் போன்ற செயல்பாடுகள் துவங்கி விட்டால், தேர்தல் ஆணையமும் சரி, நீதி மன்றங்களும் சரி, உள்வீட்டு அரசியலில் குறிக்கீடு செய்ய விரும்பமாட்டார்கள். அந்த வகையில், தேர்தல் முடியும் வரையிலாவது, கட்சியின் மத்திய குழு கூட்டத்தின் முடிவுகள் அதி முக்கியமாக பார்க்கப்படும்.



காலைக்கதிர்
Kalaikkathir

# இலங்கையின் மறுசீரமைப்புச் செயற்திட்டங்களை புதிய ஜனாதிபதியின் தெரிவு தரம்புரளச்செய்யாது

## 'மூடீஸ்' சர்வதேச கடன் தரப்படுத்தல் நிறுவனம் தெரிவிப்பு




இலங்கையின் புதிய ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்கதெரிவுசெய்யப்பட்டிருப்பதுநாட்டின்மறுசீரமைப்பு செயற்திட்டங்களைத் தடம்புரளச்செய்யாது என 'மூடீஸ்' தரப்படுத்தல் நிறுவனம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றுமுடிந்த ஒன்பதாவது ஜனாதிபதித்தேர்தல் மற்றும் அதன் முடிவுகளை அடுத்து, நியூயோர்க்நகரைத்தளமாகக்கொண்டுஇயங்கிவரும் 'மூடீஸ்' எனப்படும் பிரபல கடன் தரப்படுத்தல் நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் பிரகாரம் இலங்கையில் அரசியல் மாற்றமொன்று நிகழ்ந்திருப்பினும், தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும்கடன்மறுசீரமைப்புநடவடிக்கைகள், சர்வதேசநாணயநிதியத்தால்ஆதரவளிக்கப்படும்செயற்திட்டம் என்பன உள்ளடங்கலாக நாட்டில் முன்னெடுக்கப்பட்டுவரும் பரந்துபட்ட பொருளாதார மறுசீரமைப்புக்கள் எவ்வித மாற்றமுமின்றி அவ்வாறே தொடரும் என எதிர்பார்ப்பதாக 'மூடீஸ்' தெரிவித்துள்ளது.

அதேவேளை நிதியியல் ஒருங்கிணைப்பை உரியவாறு பேணுவது சற்று சவாலான விடயமாக இருக்கக்கூடுமெனச் சுட்டிக்காட்டியிருக்கும் 'மூடீஸ்' கடன் தரப்படுத்தல் நிறுவனம், புதிய நிர்வாகம் இந்த பொருளாதார சவால்களைத் தாண்டிச்செல்லும்போது சில கொள்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படக்கூடும் என எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளது.

'சர்வதேச நாணய நிதிய உதவிச்செயற்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டிருக்கும் கட்டமைப்பு சார்ந்த சீரமைப்புக்கள்மற்றும்கடன்மறுசீரமைப்பு என்பனஉள்ளடங்கலாகநாட்டில் தற்போது அமுலில் இருக்கும் மறுசீரமைப்புநடவடிக்கைகளோ, பேரண்டப்பொருளா தாரக் கொள்கைகளோ பெருமளவுக்கு மாற்றமடையும் என நாம் கருதுவில்லை. இருப்பினும் நிதியியல் ஒருங்கிணைப்பைப் பேணுவதில் நிலவும் சவால்களுக்குமத்தியில்சிலகொள்கைகளுக்கு முன்னுரிமையளிக்கப்படக்கூடும்' என 'மூடீஸ்' கடன் தரப்படுத்தல் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.(05)

# எல்ல, கினல-ஸ்ரீல் காட்டுக்கு தீ வைத்த சந்தேகநபர் கைது

எல்ல பொலிஸ் பிரிவில் கினலன் பகுதிக்கு அருகில் காட்டுக்கு தீ வைத்த சந்தேகநபர் ஒருவரர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 24 ஆம் திகதி கினலன் பகுதிக்கு அருகில் காட்டுக்கு தீ வைத்ததாக சந்தேகிக்கப்படும் நபர் ஒருவர் புதன்கிழமை மேலும் ஒரு காட்டுப் பகுதிக்கு தீ வைக்க முற்பட்ட போது கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

எல்ல கினலன் தோட்டத்தை சேர்ந்த 32 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் வனப் பகுதிகளுக்கு தீ வைப்பதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய சந்தேக நபரை அவதானித்து போது அவர் மேலும் வனப்பகுதி ஒன்றுக்கு தீ வைக்க முற்பட்ட போது கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 24 ஆம் திகதி கினலன் பகுதியில் காட்டு தீயினால் சுமார் 15 ஏக்கர் காடு எறிந்து நாசமாகி உள்ளதாக அனர்த்த முகாமைத்துவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சந்தேக நபரை வியாழக்கிழமை பண்டாரவளை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.(05)

# நுவரெலியாவில் அநுரவின் வெற்றியை முன்னிட்டு விசேட கலந்துரையாடல்







இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதியாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க தெரிவு செய்யப்பட்டுள்ளமையை முன்னிட்டு புதன்கிழமை மாலை நுவரெலியாவில் விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்களால் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு நுவரெலியா பிரதான நகரில் பேல் பஜார் பகுதியில் அமைக்கப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் கிளையில் குறித்த கலந்துரையாடல் நிகழ்வும் வெற்றிக் கொண்டாட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது வருகை தந்த பொதுமக்களுக்கு பால் சோறும் இனிப்பு பண்டங்களும் வழங்கி தமது வெற்றியை அமைதியான முறையில் கொண்டாடினர்.

குறித்த கலந்துரையாடலில் கலந்து கொண்டவர்கள் நுவரெலியா மாவட்டத்திலுள்ள தொடர்ந்து உள்ள சில முக்கிய பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வு வழங்க வேண்டுமெனவும் மக்கள் கோரிக்கை முன் வைத்தனர்.

குறித்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தி கட்சியின் முக்கியஸ்தர்களின் பங்களிப்புடன் , ஆதரவாளர்கள், மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.(05)

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



காலைக்கதிர் Kalaikkathir

# யாழில் மோட்டார் சைக்கிளும் வானும் மோதியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

யாழில் மோட்டார் சைக்கிள் வானுடன் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் புதன்கிழமை உயிரிழந்துள்ளார். முதலாம் வட்டாரம், புங்குடுதீவு பகுதியைச் சேர்ந்த இலட்சுமிகாந்தன் தனஞ்சயன் (வயது - 36) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில் -

இவர் கடந்த 15ஆம் திகதி யாழ்ப்பாணம் - பண்ணை வீதியால் சென்றுகொண்டிருந்த வேளை, வீதியால் சென்ற வான் மீது இவரது மோட்டார் சைக்கிள் கைப்பிடி தட்டுப்பட்டது. இந்நிலையில் அவர் கீழே விழுந்து மயங்கியுள்ளார்.

அங்கு இருந்தவர்கள் அவரை மீட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். இருப்பினும் சிகிச்சை பலனின்றி அவர் புதன்கிழமை இரவு 10 மணியளவில் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.(05)

# பேக்கரி பொருள்களின் விலைகள் குறைய வேண்டும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை கோரிக்கை

சந்தையில் முட்டையின் விலை குறைந்துள்ளதால் பேக்கரி பொருள்களின் விலையும் குறைய வேண்டும் என பாவனையாளர் அலுவர்கள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் சந்தையில் அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை ஒன்றின் விலை, தற்போது 28 முதல் 35 ரூபா வரை உள்ளதாக அதன் தலைவர் துசித இந்திரஜித் உடுவர தெரிவித்தார்.

அதன்படி, அந்த நன்மையை நுகர்வோருக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாவனையாளர் அலுவர்கள் அதிகார சபை தலைவர் தெரிவித்துள்ளார்.(05)

# அரசு வடக்கு கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளையும் கவனத்தில் எடுக்க வேண்டும்

## தமிழர் சமூக ஜனநாயகக்கட்சி வேண்டுகோள்




நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியினராகிய நாம் 13 ஆவது திருத்தம் முழுமையாக அமுலாக்கப்படல், ஆறு மாதங்களுக்குள் மாகாண சபை தேர்தல்கள் நடத்தப்படுதல் என்று தெளிவாக தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்த ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளருக்கு வாக்களிக்கும் படி வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அனைத்து தேர்தல் மாவட்டங்களிலும் ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் இறுதிப் பெரும்பான்மையை பெற வாக்களித்த அனைத்து வாக்காளர்களுக்கும் தமிழர் சமூக ஜனநாயக கட்சியின் சார்பில் அதன் செயலாளர் வை. விக்கினேஸ்வரன் நன்றிகளை தெரிவித்துள்ளார்.

அதேவேளையில் இந்த சந்தர்ப்பத்தில் நாட்டில் புதிய சகாப்தம் ஒன்றை தோற்றுவிக்க வடக்கு கிழக்கு, மலையகம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் பெரும்பான்மையான வாக்குகளால் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் தோழர் அனுரகுமார திஸாநாயக்கவிற்கு தமிழர் சமூக ஜனநாயக கட்சியின் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கின்றேம்.

புதிய அரசு வடக்கு கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களின் நீண்ட நாள் அபிலாசைகளை கவனத்திலெடுத்து மாகாணசபை தேர்தல்களை காலதாமதமின்றி நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றோம் என தமிழர் சமூக ஜனநாயக கட்சி தனது ஊடக அறிக்கையை வெளியீட்டுள்ளது.

(05)



# வான் – மோ.சைக்கிள் மோதி பாரிய விபத்து

## இருவர் படுகாயம்



அக்குரெஸ்ஸ - சியம்பலாகொட வீதியில் போபகொட பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

சாரதியின் கவனக்குறைவால் செலுத்தப்பட்ட வான் எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளில் மோதியதால் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இவ்விபத்தின்போது, மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்துள்ள நிலையில் அக்குரெஸ்ஸ மாவட்ட வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (05)



# புத்தளம், ஆராச்சிக்கட்டுவ பகுதியில் சந்தேகத்திற்கிடமாக ஒருவர் இறப்பு

புத்தளம், ஆராச்சிக்கட்டுவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட விஜயகட்டுபொத்த பிரதேசத்தில் உள்ள வீடொன்றிற்கு முன்பாக சந்தேகத்திற்கிடமானமுறையில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் கடந்த 24 ஆம் திகதி மாலை இடம்பெற்றுள்ளது.

சிலாபம், ஆராச்சிக்கட்டுவ பிரதேசத்தைச் சேர்ந்த 57 வயதுடைய நபரொருவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரது உடலில் பலத்த காயங்கள் காணப்படுகின்றன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.(05)

# தியாக தீபம் திலிபனுக்கு தீவகத்தில் அஞ்சலிகள்





தியாகதீபம் திலீபனின் 37 ஆவது நினைவேந்தல் ஊர்தி பவனி நிகழ்வு புதன்கிழமை மாலை யாழ் தீவகம் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் யாழ் தீவக பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டது.

யாழ் வேலணை நினைவுத் தூபி முன்றிலில் ஆரம்பிக்கப்பட்ட மேற்படி ஊர்தி பவனி தீவகத்தின் பல்வேறு பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது திலிபனின் திருவுருவப்படத்திற்கு மக்கள் அஞ்சலி செலுத்தினர்.(05)

# மகாவலி ஆற்றில் நீராடச்சென்ற இருவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

பொல்கொல்ல அணைக்கு கீழே மகாவலி ஆற்றில் நீராடச் சென்ற 5 இளைஞர்களில் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என வத்தேகம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த ஐந்து இளைஞர்களும் புதன்கிழமை மது அருந்திவிட்டு மகாவலி ஆற்றில் இறங்கியுள்ளதாக பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

பொல்கொல்லநீர்த்தேக்கத்திலிருந்து விக்டோரியாவிற்கு நீர் திறக்கும் வாயில் ஒன்று புதன்கிழமை காலை முதல் திறக்கப்பட்டுள்ளதுடன், அதில் சிக்கிய 5 இளைஞர்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டதுடன், மூவர் கற் பாறைகளில் தொங்கி உயிர் பிழைத்துள்ளனர்.

இந்த இளைஞர்கள் அனைவரும் கண்டி-யக்கஹபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவருகிறது.

நீரில் அடித்துச் செல்லப்பட்டு, காணாமல் போன இருவரில் ஒருவர் தனஞ்சயஇந்துவர (வயது-22) எனவும் மற்றவர் யாரெனத் தெரியாது என உயிர் தப்பியோர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர். நீரில் அடித்துச் செல்லப்பட்ட இரு இளைஞர்களை தேடும் நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.(05)

## தமிழ் அரசு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய கட்சிகள் ஒன்றிணைந்தது போல் நாடாளுமன்றத் தேர்தலிலும் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும். இது தொடர்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவிடவும் கலந்தாலோசித்திருக்கின்றேன்.

தமிழ்த் தேசியத்தை தக்கவைக்க ஒரு குடையின் கீழ், ஒரு சின்னத்தில் போட்டியிடவேண்டிய தேவை இருக்கின்றது. தமிழ்த் தேசிய கட்சிகள் பிளவுபட்டு போட்டியிடுவதால் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, திருகோணமலையில் தமிழ் பிரதிநித்துவத்தை இழக்க நேரிடும்.

தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பில் இலங்கைதமிழரசுக்கட்சிமற்றும்தமிழ்த்தேசிய மக்கள்முன்னணிஆகியனவும்ஒன்றிணைந்து போட்டியிட வேண்டும் என்ற அழைப்பை விடுக்கின்றோம். பதவிக்காக அல்லாமல் தேசியப் பற்றோடு ஒன்றிணைவோம். நான் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடமாட்டேன். ஆனால் தமிழ்த் தேசிய கொள்கைக்காகப் பரப்புரை செய்வேன்-- என்றார்.

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் ஆனந்த விஜேபால இந்தத் தகவல்களைத் தெரிவித்தார். அரச வாகனங்கள் இவ்வாறு முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டமை குறித்து அவர் தனது ஏமாற்றத்தையும் வெளிப்படுத்தினார்.

## இலங்கை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற நிகழ்வில் தலைமை அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் பொருளாதார நெருக்கடி நிலை ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் சீனா இலங்கைக்கு வழங்கிய ஒத்துழைப்பை இந்த சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன். அதற்காக நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். சீனாவின் ''ஓர் ஒழுங்கு ஒரு பாதை'' வேலைத்திட்டத்தின் கீழ் இந்த நாடு பல நிகழ்ச்சித் திட்டங்களை வெற்றிகரமாக முடித்திருப்பது தொடர்பாகவும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மேலும் இலங்கையின் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு சம்பந்தமாக தற்போது செயற்படுத்தி வரும் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்துக்காக சீனநிதிநிறுவனங்கள் தொடர்ந்து வழங்கிவரும் ஒத்துழைப்பு தொடர்பில் இலங்கை உளப்பூர்வமாக நன்றி தெரிவிக்கிறது.

அதேநேரம் இலங்கையின் பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்பும் சவால்களுக்கு நாங்கள் தொடர்ந்தும் முகம்கொடுக்கும்போது சீனாவின் சகோதரத்துவம், ஒத்துழைப்பு மற்றும் தொடர்ச்சியாக பங்களிப்பை இலங்கை எதிர்பார்க்கிறது.

சீனாவின் சுற்றுலா பயணிகளின் வருகை தொடர்ந்து அதிகரித்து வருவதுடன் இந்த வருடத்தின் முதல் 6 மாதங்களில் 77 ஆயிரத்துக்கும் அதிகமான சீன சுற்றுலாப் பயணிகள் எமது நாட்டுக்கு வந்துள்ளனர். இலங்கையினால் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட இலவச விசா அனுமதி பத்திரம் வேலைத்திட்டத்தில் சீனாவும் உள்ளடங்கி இருப்பதை இந்த சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் இருந்துவரும் நட்பு ரீதியான இராஜதந்திர தொடர்புகளை மேலும் பலப்படுத்துவதற்கு தேவையானநடவடிக்கைகளை மேற்கொள்ள நாங்கள் எதிர்பார்க்கிறோம். மக்கள் சீனா உருவாக்கத்தின் 75ஆவது வருட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்ற வாய்ப்பு கிடைத்தமையிட்டு மகிழ்ச்சியடைகிறேன் - என்றார்.

## மேலும் 3.3....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவசாயிகளுக்கு உரியவாறு கிடைக்கக்கூடிய வகையில் நேரடியாக அவர்களது வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்படும்.

விவசாய மூலப்பொருட்களை உரியவாறு முகாமைத்துவம் செய்யும் நோக்கில் நியாயமான விலையில் உரம் உள்ளிட்ட மூலப்பொருட்களை வழங்குவதற்கும், சிறந்த விவசாய நடைமுறைகளுக்கு ஏற்ப இரசாயன மற்றும் சேதன உரம் உள்ளிட்ட விவசாய மூலப்பொருட்களுக்கு மானியம் வழங்குவதற்குமான நடவடிக்கை எடுக்கப்படும் என புதிய அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞானபத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கு அமைவாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை பின்னடைவை எதிர்கொண்டிருக்கும் மீன்பிடித்தொழிலை ஊக்குவித்து, உற்பத்திச்செலவைக் குறைப்பதற்காக எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் மீனவ சமூகத்துக்கு எரிபொருள் மானியத்தை வழங்குமாறும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க திறைசேரிக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதற்கமைய ஆழ்கடல் மற்றும் நாளாந்த படகுகளுக்கு மாதாந்த அடிப்படையில் எரிபொருள் மானியம் வழங்கப்படும். இந்த மானியம் மீனவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக வைப்புச்செய்யப்படும்.

மீன்பிடித்தொழிலை நிலைபேறானதும், சுற்றுச்சூழலுக்கு ஏற்றவாறும் மேம்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், அதனூடாக மீன் உற்பத்தியை அதிகரித்தல், நுகர்வோருக்கு நியாயமான விலையில் கிடைக்கச்செய்தல், மீன்பிடித்தொழிலில் ஈடுபடுவோரின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தல் ஆகிய விடயங்களும் அரசாங்கத்தின் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நிலையில், அதன் பிரகாரமே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு தற்போது கடும் பின்னடைவை சந்தித்துவரும் கடன் மீன்பிடித்தொழிலை முன்னேற்றுவதற்கு அவசியமான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## ஈ- பாஸ்போர்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடைநிறுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று இடைக்கால உத்தரவு பிறப்பித்தது.

எபிக்லங்கா (பிரைவேட்) லிமிடெட் மற்றும் அதன் நிறைவேற்றுத் தலைவரால் டெண்டர் நடைமுறையை மீறிய ஊழல் பேரம் என்ற குற்றச்சாட்டின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை ஏற்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி மொஹமட் லஃபர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார். இந்த உத்தரவு ஒக்டோபர் முதலாம் நாள் வரையில் நடைமுறையில் இருக்கும்.

எபிக் லங்கா தனது விண்ணப்பத்தில், தேசிய கொள்முதல் வழிகாட்டுதல்களை மீறி, முறையான கொள்முதல் நடைமுறைக்கு புறம்பாக, இரு நிறுவனங்களிடம் இருந்து (Thales DIS Finland OY மற்றும் Just In Time Technologies (Pvt) Lt-) நிறுவனத்திடம் இருந்து 750,000 எண்கள் இயந்திரம் படிக்கக்கூடிய கடவுச்சீட்டுக்களை வாங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக எபிக் லங்கா தனது மனுவில் குற்றம்சாட்டியுள்ளது. மேலும், கொள்முதலில் முறைகேடுகள் நடந்ததாக தேசிய கொள்முதல் ஆணையமும் எழுத்துப்பூர்வமாக ஒப்புக்கொண்டுள்ளதாக மனுதாரர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

செப்டம்பர் 02, 2024 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அதனைத் தடுத்து நிறுத்த உத்தரவிடவேண்டும் என்றும் மனுதாரர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

மனுதாரர்கள் பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முன்னாள் பொது பாதுகாப்பு அமைச்சர் திரான் அலஸ், குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம், அமைச்சர்கள் அமைச்சரவை மற்றும் பலரை இந்த வழக்கில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இலங்கையில் டிஜிட்டல் மாற்றம், மின்-அரசு, பணிப்பாய்வு மேலாண்மை, பாதுகாப்பான எலக்ட்ரானிக் பேமென்ட் ஆட்டோமேஷன், தகவல் அமைப்புகள் பாதுகாப்பு மற்றும் மொபைல் எண்டர்பிரைஸ் ஆட்டோமேஷன் தீர்வுகளை வழங்குவதாக மனுதாரர் கூறினார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com






# சம்மாந்துறையில் இரு மாதங்களாய் வீணாக வழிந்தோடும் குடிதண்ணீர்



அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறையில் உள்ள உடங்கா பிரதேசத்தில் அம்பாறை–கல்முனை பிரதான வீதியின் ஒரு மருங்கில் சுமார் 2 மாதங்களுக்கு மேல் குடிநீர் வீணடிக்கப்பட்டு வருகிறது.

கடந்த காலங்களில் அப்பகுதியில் வீதி புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர், சேதமாக்கப்பட்டதாக கூறப்படும் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு சொந்தமான குடிநீர் குழாய் திருத்தப்பட்ட பின்னர், இவ்வாறு மேலதிக நீரை தினமும் வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட் டிருப்பதாக அப்பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

இக்குழாயினூடாக வீணாக வழிந்தோடும் நீர், வடிகானினூடாக அருகில் உள்ள குளத்தை நோக்கி சுமார் 2 கிலோமீற்றர் வீணாக வெளியேற்றப்பட்டு கலக்கப்படுகிறது.

அத்துடன் சம்மாந்துறை பகுதியில் இன்னும் பல குடும்பங்கள் குடிநீர் இணைப்பின்றி அல்லற்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில் நீர் வீணாக வெளியேற்றப்படுவது பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

தற்போது நாட்டில் நிலவும் கடும் உஷ்ணத்தின் விளைவாக தண்ணீருக்கான தேவை அதிகரித்துள்ளது. இதனையடுத்து அத்தியாவசியமற்ற நடவடிக்கைகளுக்காக நீரை பயன்படுத்துவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்துமாறும் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அடிக்கடி பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறது.

இந்நிலையில், குடிநீர் வீணாக வெளியேற்றப்படுவது தொடர்பில் ஏன் பலரும் அசமந்தத்தனமாக உள்ளனர் என்றும் அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அத்தோடு, இது தொடர்பில் உரிய தரப்பினர் கவனம் செலுத்த வேண்டும். இல்லாவிடின், நீர் வீணாக வெளியேறிச் செல்வதானால் எதிர்காலத்தில் நிலவக்கூடிய நீர் தட்டுப்பாட்டை யாராலும் தடுக்க முடியாது என்றும் தெரிவிக்கின்றனர்.

சில பிரதேசங்களில் குழாய் நீர் கசிவு என்பது சாதாரணமாகக் கருதப்பட்டாலும் இப்பகுதியில் ஏற்பட்டுள்ள நீர் வீண்விரயம் பாரதூரமானது. குடிநீர் விநியோகக் குழாய்களில் அழுத்தம் அதிகரிக்கும்போது வெடிப்புக்கள் ஏற்படக்கூடும்.

சில பிரதேசங்களில் பொருத்தப்பட்டுள்ள நீர்க் குழாய்களில் வெடிப்புக்கள் ஏற்பட்டு மணித்தியாலக் கணக்கில், நாள்கணக்கில் குடிநீர் வீண்விரயமானால், அது தொடர்பில் பின்னர் கவனம் செலுத்தப்பட்டு நிலைமை சீர் செய்யப்படும்.

ஆனால், எமது பிரதேசத்தில் நிலைமை அவ்வாறில்லை. இங்கு நீர் பிரச்சினைகள் அதிகமாக காணப்படுகிறது. இவை தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பிரதேசவாசிகள் கூறுகின்றனர். (05)

## மட்டக்களப்பில் இலஞ்சம் வாங்கிய பொலிஸார் இருவர் அதிரடிக் கைது

மண் ஏற்றிவந்த லொறி சாரதியிடம் 2000 ரூபா இலஞ்சம் பெற்ற பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஆகியோர் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகளால் புதன்கிழமை மாலை மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவில் கைது செய்யப்பட்டனர் என மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

புதன் மாலை கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவில் மணல் ஏற்றிவந்த டிப்பர் வாகனத்தை நிறுத்தி பரிசோதித்த விசேட பொலிஸ் பிரிவினருடன் இணைக்கப்பட்டிருந்த பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவர்.

கொழும்பிலிருந்து வருகை தந்த இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு விசேட அதிகாரிகளே 2000 ரூபா இலஞ்சம் வாங்கிய நிலையில் கையும் மெய்யுமாகக் கைது செய்தனர்.

கைதான சந்தேக நபர்கள் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (05)

## உயர் தர மாணவியை ஏமாற்றி விடுதிக்கு அழைத்துச்சென்ற பாடசாலை அதிபருக்கு எதிராக பெற்றோர்கள் ஆர்ப்பாட்டம்



திப்பிட்டிய நகரத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் உயர் தர மாணவி ஒருவரை ஏமாற்றி விடுதிக்கு அழைத்துச் சென்றதாக கூறப்படும் அதே பாடசாலையில் கடமையாற்றும் அதிபருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரி பெற்றோர்கள் சிலர் குறித்த பாடசாலைக்கு முன்பாக புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சந்தேக நபரான 42 வயதுடைய பாடசாலை அதிபர் தனது பாடசாலையில் கல்வி கற்கும் உயர் தர மாணவி ஒருவரிடம் பரீட்சை வினாத்தாளின் பதில்களைச் சொல்லித் தருவதாகக் கூறி மாணவியை ஏமாற்றி விடுதி ஒன்றிற்கு அழைத்துச் சென்றுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் சந்தேக நபரான பாடசாலை அதிபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கடந்த 19 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் மேலதிக விசாரணைகளுக்கு உட்படுத்தப்படாமல் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகப் பெற்றோர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

மேலும், சந்தேக நபர் குறித்த பாடசாலையில் அதிபராகத் தொடர்ந்து கடமையாற்றி வருவதாகவும் சந்தேக நபருக்குப் பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர்கள் சிலர் ஆதரவளித்து வருவதாகவும் பெற்றோர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

(05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

# உங்களுக்குள்ள அதிகாரங்களை பயன்படுத்தி இந்திய மீனவர்களை விடுதலை செய்யுங்கள்

## இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் இலங்கை ஜனாதிபதிக்குக் கடிதம்

கைது செய்யப்பட்டுள்ள இந்திய மீன்வர்களை இலங்கையின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள அநுரகுமார திசநாயக்க தனக்குள்ள அதிகாரங்களை பயன்படுத்தி விடுவிப்பதன் மூலம் புதிய சகாப்தத்தை ஆரம்பிக்கவேண்டும் என இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சுதா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை ஜனாதிபதிக்கு எழுதியுள்ள பகிரங்க கடிதத்தில் அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அனைத்து மீனவர்களையும் பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ள அவர்களின் அனைத்து படகுகளையும் நல்லெண்ண மற்றும் நேச சமிக்ஞையாக இலங்கை ஜனாதிபதி விடுவிக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள அவர், அவ்வாறான நடவடிக்கை இலங்கைக்கு ஒரு புதிய திசையை வழங்கும். அவரது நடவடிக்கையை மேலும் வலுப்படுத்தும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டின் மயிலாடுதுறை தொகுதியை சேர்ந்த 37 மீனவர்களையும் விடுதலை செய்வதன் மூலம் சிறந்த ஆரம்பத்தை வழங்க முடியும் எனத் தெரிவித்துள்ள காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர ;80 மீனவர்கள் இலங்கையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா பாகிஸ்தான் உட்பட பல நாடுகளுடன் தனது கடல்எல்லையை பகிர்ந்துகொண்டுள்ளது. ஆனால் எந்த நாடும் இலங்கையை போல தனது அயல்நாட்டு மீனவர்கள் மீது தொடர்ச்சியாக தாக்குதலை மேற்கொள்வதில்லை, கைதுசெய்வதில்லை, அபராதம் விதிப்பதில்லை என காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தரப்பின் சீற்றம் கொள்ளவைக்கும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன. பிராந்தியத்தின் பொறுமையும் அமைதியும் சோதனை செய்யப்படுகின்றது. வங்களா விரிகுடா போன்ற பொதுக்கடலில் மீனவர்களை குற்றவாளிகள் போல நடத்த முடியாது என இலங்கை ஜனாதிபதிக்கான கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் அது கடந்தகாலத்தில் இடம்பெற்றது. தற்போது நீங்கள் ஆட்சிபொறுப்பில் இருக்கின்றீர்கள். புதிய ஆரம்பம் குறித்து வாக்களித்துள்ளீர்கள். உங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன் என அவர் தெரிவித்துள்ளார். (05)

# போர் துப்பாக்கி, தோட்டாக்களுடன் மொனராகலையில் வயோதிபர் கைது



மொனராகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வெதிகும்புர பிரதேசத்தில் போர் துப்பாக்கி மற்றும் தோட்டாக்களுடன் வயோதிபர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொனராகலை, வெதிகும்புர பிரதேசத்தில் வசிக்கும் 70 வயதுடைய வயோதிபர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து போர் துப்பாக்கி மற்றும் 7 தோட்டாக்கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக மொனராகலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.(05)

# முன்னாள் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் பயன்படுத்திய வாகனங்கள் மீளக்கையளிப்பு

முன்னாள் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்கள் பயன்படுத்திய வாகனங்கள் மீள கையளிக்கப்பட்டுள்ளன.

புதிய அரசாங்கம் அமைக்கப் பட்டதைத் தொடர்ந்து அமைச்சர்கள் பதவி இழப்பு மற்றும் அமைச்சுகளில் செயலாளர்கள் மாற்றமடைந்துள்ள நிலையில் இவ்வாறு வாகனங்களை மீள கையளிக்குமாறு அறிவுறுத் தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தககது.

அமைச்சர்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு ஒதுக்கப்படும் வாகனங் களின் எண்ணிக்கையை குறைக்க வுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

(05)

# இந்திய உதவித் திட்டத்தின்கீழ் யாழ். பல்கலை மாணவர்களுக்கு ரூபா 30 லட்சம் நன்கொடை







இலங்கையின் வடக்கு - கிழக்கு பிராந்திய பல்கலைக்கழகங்களில் பயிலும் பொருளாதார ரீதியில் பின்தங்கிய மாணவர்களுக்கு இந்திய அரசாங்கத்தால் வழங்கப்படும் கல்விக்கான நிதியுதவித் திட்டத்தின் கீழ், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான புலமைப்பரிசில் உதவித் தொகை வழங்கும் நிகழ்வு புதன்கிழமை இடம்பெற்றது.

இந்திய அரசாங்கத்தின் உதவித் திட்டத்தின் கீழ், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களிலும் இருந்தும் சுமார் 100 மாணவர்கள் இதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இத் திட்டத்துக்கான ரூபா 30 லட்சம் புதன்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தரிடம் கையளிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் தூதரகத்தின் துணைத்தூதுவர் ஸ்ரீ சாய்முரளி இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உதவித் தொகைக்கான காசோலையைக் கையளித்தார்.

இந்தியத் தூதரகத்தின் கல்வி மற்றும் கலாசார விவகாரங்களுக்கான பிரதித் துணைத் தூதுவர் ஸ்ரீ கே. நாகராஜன் மற்றும் பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள், அதிகாரிகள், மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள், பயன்பெறும் மாணவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இத்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப் பட்டுள்ள கிழக்கு பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு வந்தாறு மூலையிலுள்ள கிழக்கு பல்கலைக்கழக நிர்வாகக் கட்டடத்தில் அடுத்த வாரம் நடைபெறவுள்ளது.(05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.09.2024இல் வெளியிடப்பெற்றது